# 10

# பரிசுத்த ஆவியானவரும் கிறிஸ்தவர்களும்

*"அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவை களைச் சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரிய வைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப் பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது" (ரோம. 8:5-7).*

பரிசுத்த ஆவியானவர் உள்ளாக வாசம்பண்ணுதல் பற்றி நாம் ஏற்கனவே படித்துள்ளோம். அடுத்து நாம், கிறிஸ்தவர்கள் குறித்துப் பரிசுத்த ஆவியானவரின் மற்ற அம்சங்களை ஆழ்ந்து சிந்திப்போம். இன்றைய நாட்களில் கிறிஸ்தவர்களின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் செயல்படு கின்றாரா? அப்படியென்றால், அவர் என்ன செய்கின்றார்?

## ஆவிக்குரிய நீர்தேக்கத்தை வழங்குகின்றார்

முதலாவதாக, பரிசுத்த ஆவியானவர், உள்ளான ஆவிக்குரிய புதுப்பித்தலுக்கு ஆதாரமூலமாக இருக்கின்றார். யோவா. 7:38, 39 வசனப்பகுதி, ' "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்." ' "... ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார்" என்று கூறுகிறது. உள்ளான ஆதாரமூலம் எதுவுமின்றி, வெளியிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து ஊற்றப்பட வேண்டிய ஒரு நீர்த்தொட்டிக்கு நேர் எதிராக, ஒரு நீரூற்றானது தன்னில் கொண்டிருக்கும் உள்ளான ஆதாரமூலத்தினி மித்தமாகத் தொடர்ந்து பாய்ந்தோடுகிறது. இதை ஆவியானவர் எப்படிச் செய்வார் என்று இயேசு கூறவில்லை, அவர் இதைச் செய்வார் என்று மட்டுமே கூறினார். இது எவ்வாறு ஆகும் என்று நாம் யூகிக்கத் தேவை யில்லை, ஆனால் பரிசுத்த ஆவியானவரின் உதவியினிமித்தமாகக் கிறிஸ்த வர்கள் ஆவிக்குரிய சேமிப்பின் ஆதாரமூலத்தைக் கொண்டுள்ளனர் என்ற உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். தேவனுடைய சித்தத்தைப் புறக்கணிக்கின்றவர்கள் அல்லது அவரது சித்தத்திற்கு நேர்மாறாக வாழ்கின்றவர்கள், தங்கள் வாழ்வில் ஆவியானவர், ஆவிக்குரிய "ஜீவத் தண்ணீரின்" ஓட்டத்தை வழங்குவார் என்று எதிர்பார்க்க இயலாது.

## பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் பிரமாணத்திலிருந்து நம்மை விடுவிக்கின்றார்

*(இரண்டாவதாக) ரோம. 8:2, 3ல் நாம், "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்'' என்று வாசிக்கின்றோம். இருதயத்தில் அல்ல, ஆனால் கல்லின்மீது எழுதப்பட்ட சட்டங்களின் அமைப்பாயிருந்த மோசேயின் பிரமாணம், மரணத்தைக் கொண்டுவந்தது (2 கொரி. 3:6). தேவனுடைய பிரமாணங்கள் மிகவும் அடிக்கடி, கல்லின்மீது எழுதப்பட்ட எழுத்துக்களாயிருந்தன மற்றும் இவைகள், அவருடைய சித்தத்தைப் பின்பற்றும் விருப்பத்துடன் அவருடைய மக்களால் இருதயத்திற்கு உட்படுத்தப்படாதிருந்தன (ரோம. 2:27-29). கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், "பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக'' (ரோம. 7:6ஆ) நியாயப்பிரமாணத்தினின்று விடுதலையாக்கப்பட்டுள்ளோம். நாம் ஆவியானவருடன் ஒத்துழைத்தால், அவர் நமது இருதயங்களை விருத்தசேதனம் பண்ணிக் கொள்வதில் நமக்கு உதவுவார். நாம் பாவம் மற்றும் மரணம் ஆகியவற்றின் பிரமாணத்திலிருந்து விடுவிக்கப்படத் தக்கதாக நமது பாவம்நிறைந்த இச்சைகள் நீக்கிப்போடப்படும் (ரோம. 8:2).*

*நாம் ஆவியானவருடன் ஒத்துழைப்பது எப்படி என்று அறிவதற்கு தேவனுடைய வசனமே நமக்கு அடிப்படையாக உள்ளது (2 தீமோ. 3:16, 17). அவர், உலகத்தை ஜெயிப்பதற்கும் வசனத்தில் உறுதியாய் நடப்பதற்கும் நாம் செய்யும் முயற்சிகளில் நமக்குப் பெலன் அளிக்க முடியும் (எபே. 3:16; 1 யோவா. 4:4) - ஆனால் நமது முயற்சிகளை நாம் மேற்கொள்ள மனதாயிருக்கும்போது மாத்திரமே அவர் அதைச் செய்யக்கூடும் (2 கொரி. 7:1).*

## நம்மை வழிநடத்துகின்றார்

*மூன்றாவதாக, ஆவியானவர் கிறிஸ்தவர்களை வழிநடத்துகின்றார். "மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்'' (ரோம. 8:14). "நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட முடியுமா?" என்பதல்ல, ஆனால் "நாம் ஆவியானவரால் வழிநடத்தப்படுவது எப்படி?" என்பதே கேள்வியாக உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது ஆவிக்குரிய பிறப்பானது வசனத்தின் மூலமாக வருகிறது (1 பேது. 1:23). நாம் இயேசுவின் கட்டளைகளில் போதிக்கப்படாதிருந்தால், அவருக்குக் கீழ்ப்படிவது எப்படி என்று அறிந்திருக்க மாட்டோம் (மத். 28:20).*

*அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் இயேசுவின் வசனத்தை*

*ஆவியானவர் வழங்கினார் (எபே. 3:3-5). அந்த வசனத்தைப் பின்பற்றியவர்கள் ஆவியானவரால் வழிநடத்தப்படுகின்றனர், ஆனால் மனிதருடைய போதனையைப் பின்பற்றுகின்றவர்கள் மனிதர்களால் வழிநடத்தப்படுகின்றனர். நாம் ஆவியானவரால் வாழவேண்டுமென்றால், "ஆவிக்கேற்றபடி நடந்துகொள்(ள)" வேண்டும் (கலா. 5:16, 25). அதாவது நாம், ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள (யோவா. 16:13) சத்தியத்தில் நடக்க வேண்டும் (2 யோவா. 4; 3 யோவா. 3, 4). நாம் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டால், நாம் நியாயப்பிரமாணத்தின் கீழல்ல (கலா. 5:18), ஆனால் கிருபையின் கீழ் இருக்கின்றோம் (ரோம. 6:14). கிருபையின்கீழ் நிலைத்து இருப்பதற்கு நாம், ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள கனிகளைக் கொடுப்பவர்களாகவும் (கலா. 5:22, 23), மாம்ச இச்சைகளைப் பின்பற்றாதவர்களாகவும் (கலா. 5:19, 21) இருக்க வேண்டும். இந்தத் தகுதிகளை நமக்காக நமது வாழ்வில் ஆவியானவர் வைப்பதில்லை; நாம் ஆவியானவருக்கென்று விதைக்கின்றவர்களாகவும் மாம்சத்திற்கென்று விதைக்காதவர்களாகவும் (கலா. 6:8) இருக்க வேண்டும்.*

## நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம் என்பதற்குச் சாட்சி கொடுக்கின்றார்

*அடுத்ததாக, "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்" என்று வாசிக்கின்றோம் (ரோம. 8:16). ஆவியானவரின் சாட்சியம் என்றால் என்ன? நமது ஆவியின் சாட்சியம் என்றால் என்ன?*

*ஆவியானவர் நமது ஆவிகளுடன் பேசுகின்றார் என்பதுபோல், ஆவியானவர் நமது ஆவிகளுடன் சாட்சிகொடுக்கின்றார் என்பதாகப் பவுல் கூறவில்லை. மாறாக, நமது ஆவிகள் கருத்தொருமையில், அதே சாட்சியைக் கொடுக்கின்ற ஆவியானவருடன் ஒன்றியிருக்கின்றன: அதாவது நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம் என்று சாட்சி கொடுக்கின்றன(ர்).*

*நமக்குள்ளாக இருக்கிற தைரியமே நமது சாட்சியாக உள்ளது (1 யோவா. 5:10), ஆனால் பரிசுத்த ஆவியானவரின் சாட்சியம் என்பது என்ன? ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ள செய்தியில் அவரது சாட்சியம் காணப்படுகிறது (எபி. 10:15). யோவான் இயேசுவைப் பற்றிப் பேசியதன் மூலமாக அவர் இயேசுவுக்குச் சாட்சியளித்தார் (யோவா. 1:15). அவ்வாறே, ஆவியானவர் சத்தியத்தின் வசனத்தைப் பற்றிய வெளிப்படுத்துதலின் மூலமாக இயேசுவைப் பற்றிச் சாட்சி கொடுத்தார் (யோவா. 15:26, 27; 1 யோவா. 5:7). இயேசுவின் வசனங்கள் ஜீவனுக்கு ஆதாரமூலமாயிருக்கின்றன (யோவா. 6:63; 12:49, 50). நாம், ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டுள்ள இயேசுவின் போதனையின் மூலமாகத் தேவனுடைய பிள்ளைகளானதால், புதிய வாழ்விற்கு வந்துள்ளோம் என்று நமது ஆவி உறுதிப்*

படுத்த முடியும்போது, நமது சாட்சியமானது பரிசுத்த ஆவியானவரின் சாட்சியத்துடன் இணைவாயுள்ளது.

தேவனுடைய வசனத்தின் மூலமாக மறுபடியும் பிறந்துள்ளவர்களுக்கு ஆவியானவர் சாட்சி கொடுத்துள்ளார் (1 பேது. 1:22, 23) - இவர்கள் இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தினாலே ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றனர் (கலா. 3:26, 27) மற்றும் புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளுகின்றனர் (ரோம. 6:4). நாம் இவற்றைச் செய்து, அவருக்குள் பிறந்திருப்பதனால் புதியஜீவனுள்ளவர்களாயிருந்தால் (1 யோவா. 2:29), நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம் என்று நாம் சாட்சிகொடுக்கும்போது, நமது சாட்சியமானது ஆவியானவரின் சாட்சியத்துடன் கருத்தொருமைப்படுகிறது. இவ்விதமாக நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கின்றோம் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டிருக்க முடியும் (1 யோவா. 5:10). ஒருவர் வேதவசனங்களுக்குப் பதில்செயல் செய்யாமல், வேறு சில வழிகளில் தாம் தேவனுடைய பிள்ளையாகியிருப்பதாகச் சாட்சிகொடுத்தால், அவரது ஆவியானது, ஆவியானவர் கொடுக்கும் அதே சாட்சியத்தைக் கொடுப்பதில்லை. வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், அவர் தமது இரட்சிப்பைப்பற்றிப் பொய்யான சாட்சியம் கொடுக்கின்றார். ஆவியானவரால் கொடுக்கப்பட்ட அதேசாட்சியத்தை நமது ஆவிகளும் கொடுக்கும்போதுமட்டுமே நமது சாட்சி உண்மையானதாக உள்ளது. இவ்விரண்டு சாட்சிகளும் கருத்தொருமைப்படும்போது மட்டுமே நாம் தேவனுடைய புத்திரர்களாக இருக்கின்றோம்.

## நமது ஜெபங்களில் உதவுகின்றார்

ஆவியானவர் நமது ஜெபங்களிலும் நமக்கு உதவுகின்றார். ரோம. 8:26, 27 பின்வருமாறு கூறுகிறது:

> அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக் கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிறபடியால், இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.

ஆவியானவரின் கிரியையானது, நாம் ''பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை" (எபே. 2:18) பெற்றுக்கொண்டுள்ள மூலமாகிய இயேசுவின் கிரியையுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஒருவேளை இவ்வாறே நாம், "ஆவியினாலே ஜெபம்பண்(ணுபவர்களாய்)" (எபே. 6:18; யூதா. 20ஐக் காணவும்) இருக்கலாம்.

ஆவியானவர் நம்மை ஜெபத்தில் பெருமூச்சு விடும்படி செய்வதில்லை. மாறாக, தேவனுடன் செய்தித்தொடர்பு கொள்வதற்கு, தகுதியற்ற வகை

*யில் வெளிப்படுத்தப்படும் நமது முயற்சிகளை அவர் ஒட்டிப்பொருத்து வதின் மூலமாக நமக்கு உதவுகின்றார். வார்த்தைகளில் இடமுடியாத நமது ஆழமான தேவைகளைப் பிதாவானவர் அறியும்படிக்கு அவர் மொழி பெயர்க்கின்றார். பார்க்லே M. நியூமென் மற்றும் யூஜீன் A. நிடா ஆகியோர், "... ஆவியானவர் பிதாவுடன் உடனடிச் செய்தித்தொடர்பு கொள்ளும்படி நிற்கின்றார் எனவே அவரது சிந்தனைகளை வெளிப்படுத்த வார்த்தைகள் பேசவேண்டியது அவசியமில்லை" என்று எழுதினர்.[1]*

*நமது தளர்வான ஜெபங்களின் நோக்கத்தை எடுத்து அவற்றைப் பிதாவினிடத்தில் வெளிப்படுத்துவதன் மூலம் அவர் ஒரு கருத்தில் நமக்காக வேண்டுதல் செய்கின்றார். அவர் நமது செய்தித் தொடர்பைப் பிதாவான வர் அறியச் செய்கின்றார். இருப்பினும், இயேசுவே நமக்கு வேண்டுதல் செய்பவராக (ரோம. 8:34) நமது சார்பாக உண்மையான ஒரே மத்தியஸ்த ராக இருக்கின்றார் (1 தீமோ. 2:5). அவர்(இயேசு) நமது செய்திகளை எடுத்துச் செல்வதுடன் நமது நிமித்தம் வேண்டுதலும் செய்கின்றார் (எபி. 7:25).*

*இவ்வசனப் பகுதியானது பாஷைகளில் பேசுவதைக் குறிப்பிடுவ தில்லை. "(ஃபிரான்ஸ் J.) லீன்ஹார்டெட் அவர்கள் குறிப்பிடுகின்றபடி, இவ்வசனப்பகுதியானது, பாஷைகளில் பேசுதல் என்பது எல்லாரும் கொண் டிராத விசேஷித்த ஆவிக்குரிய வரமாயிருந்தபடியால், (பாஷைகளில் பேசு வதைக் குறிப்பதாயிருந்தால்) எல்லா கிறிஸ்தவர்களையும் குறிப்பிடுவதாயி ருக்கிறது."[2]*

## நம்மைக் கிறிஸ்துவுக்குள் முத்திரையிடுகின்றார்

*மீட்கப்படும் நாளுக்கென்று (எபே. 4:30) ஆவியானவர் நம்மைக் கிறிஸ்துவுக்குள் முத்திரையிடுகின்றார் என்றும், ஒரு "அச்சாரமாக" அவர் நமது இருதயங்களுக்குள் அனுப்பப்படுகின்றார் (2 கொரி. 1:22; 5:5) என்றும் எபே. 1:13 கூறுகிறது.*

*நாம் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவுக்குக் கீழ்ப்படிந்ததால் (அப். 5:32) பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டோம் (அப். 2:38). இவ்விரு வசனப்பகுதிகளிலோ அல்லது வேதாகமத்தில் வேறு எவ்விடத் திலோ, நாம் ஆவியானவரின் பிரசன்னத்தை அறியக்கூடும்படிக்கு ஒரு "உணர்வை" பெறுகின்றோம் என்று கூறப்படுவதில்லை. யோவானின் கூற்று தனிச்சிறந்ததாக உள்ளது: "அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளு கிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின் ஆவியினாலே அறிந்திருக்கிறோம்" (1 யோவா. 3:24). இந்த வசனமானது அவர் நம்மில், அது வாசம்பண்ணுவதை நாம் எவ்வாறு அறிகின்றோம் அது எழுதப்பட்டுள்ள வசனத்தின் மூலமாகவோ அல்லது வேறொரு வழியிலோ என்று கூறுவதில்லை. இந்தக் காரணத்தினால், இவ்வசனமானது, ஆவியானவர் தமது பிரசன்னத்தை நாம் அறியக் காரணமாயிருப்பது எப்படி என்று நிரூபிக்க பயன்படுத்தப்பட முடியாது.*

*நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படிக்கு (கலா. 3:26, 27) இயேசுவின் சித்தத்திற்குப் பதில்செயல் செய்திருந்தால், ஆவியானவர் நமக்கு அருளப்படுவார் (கலா. 4:6). தெய்வீகத்துவம் வாசம்பண்ணுதல் குறித்து வேதாகம சத்தியங்களை நாம் விசுவாசத்தின் மூலமாக ஏற்றுக்கொள்ள முடியும் (எபே. 3:17). ஆவியை நாம் காணவோ அல்லது உணரவோ இயலாதிருப்பினும், தேவனுடைய வசனத்தின் அடிப்படையில், நம் ஒவ்வொருவரும் நமக்குள் வாசம்பண்ணுகின்ற மனிதத்துவ ஆவியைக் கொண்டுள்ளோம் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் (சக. 12:1). அவ்வாறே, பரிசுத்த ஆவியானவரும் நமக்குள் வாசம்பண்ணுகின்றார் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

*நமக்குள் வாசம்பண்ணுகின்ற ஆவியானவரின் பிரசன்னம் என்பது நம்மால் உணரக்கூடியதாகவோ அல்லது அனுபவ அறிவின் அடிப்படையிலானதாகவோ இருந்தால், கொரிந்தியருக்குள் ஆவியானவர் வாசம்பண்ணினார் என்று அவர்களுக்குக் கூறுவதற்காகப் பவுல் எழுதத் தேவையிருந்திராது (1 கொரி. 6:19). அதற்குப் பதிலாக அவர், தெளிவான உணர்வு அல்லது வெளிப்பாடுகளின் காரணத்தால் ஆவியானவர் அவர்களுக்குள் வாசம்பண்ணுவதை அவர்கள் அறிந்திருந்தார்கள் என்று கூறியிருக்க முடியும்.*

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் ஆவியானவர் நமக்குள் இருக்கின்றார், அவராலே நாம் முத்திரையிடப்பட்டுள்ளோம், மீட்கப்படும் நாளுக்கென்று அவரை நாம் அச்சாரமாகப் பெற்றுள்ளோம் என்ற உறுதிப்பாட்டைத் தேவனுடைய வசனத்திலிருந்து நாம் பெறமுடியும்.*

## நமது வாழ்வில் கனிகளைக் கொடுக்கச் செய்கின்றார்

*கிறிஸ்தவர்கள் ஆவியானவரின் போதனையைப் பின்பற்றுவதினால் ஆவியின் கனிகள் என்று அறியப்படுகிற பல பண்புகளை மேம்படுத்திக் கொள்ளும்படி வழிநடத்தப்படுகின்றனர்: "அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் ..." (கலா. 5:22, 23; ரோம. 8:23ஐயும் காணவும்). நாம் மாம்ச இச்சைகளை மரிக்கச் செய்வதோடு (கலா. 5:24; எபே. 4:22; கொலோ. 3:8), ஆவியின் கனிகள் என்று பட்டியலிடப்பட்டுள்ள அந்தப் பண்புகளை மேம்படுத்திக்கொள்ளவும் வேண்டும் (எபே. 4:23, 24; கொலோ. 3:10-14). ஆவிக்குரிய பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்று நமக்குக் கட்டளையிடப்பட்டுள்ளதால், நாம் அவற்றை மேம்படுத்திக்கொள்ள வேண்டிய பொறுப்பைக் கொண்டுள்ளோம்.*

| | |
|---|---|
| *அன்பு* | *யோவா. 13:34; கொலோ. 3:14* |
| *சந்தோஷம்* | *பிலி. 4:4; 1 தெச. 5:16* |
| *சமாதானம்* | *பிலி. 4:6, 7; எபி. 12:14* |
| *நீடியபொறுமை* | *2 கொரி. 6:6; எபே. 4:2* |
| *தயவு* | *கொலோ. 3:12; 2 பேது. 1:7* |

| | |
|---|---|
| *நற்குணம்* | *எபே. 5:9; 2 தெச. 1:11* |
| *உண்மை - விசுவாசம்* | *வெளி. 2:10இ* |
| *சாந்தம்* | *1 தீமோ. 6:11; தீத்து 3:2* |
| *இச்சையடக்கம்* | *2 பேது. 1:6* |

*பவுல், ஆவியானவரின் கனிகள் அற்புதவிதமாக நமக்குத் தரப்படுவதாக எழுதவில்லை. மாறாக, ஆவிக்குரிய பண்புகளை நாம் "தரித்துக்கொள்ள" வேண்டும் என்று அவர் எழுதினார் (கொலோ. 3:12).*

## ஐக்கியத்திற்கான நமது அடிப்படையை வழங்குகின்றார்

*இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நாம், "சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதை யாயிரு(க்க)" வேண்டும் (எபே. 4:3). ஒரே ஆவியானவராயிருப்பவர் (எபே. 4:4), ஒரு விசுவாசத்தை (எபே. 4:5) உண்டாக்குகிற போதனையின் ஒருமைப்பட்ட அமைப்பு என்ற வகையிலான சத்தியத்தை (யோவா. 16:13) வெளிப்படுத்தியுள்ளார். நாம், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக ... தைரியமாய்ப் போரா(டினால்)" (யூதா 3), ஆவியானவர் நமக்குச் சாத்தியமாக்கியுள்ள அந்த ஒருமைப் பாட்டைப் பராமரிக்க நாம் நாடுகின்றோம் என்றாகிறது. அந்த ஒருமைப் பாடு சரியான எண்ணப்போக்கு (எபே. 4:1-3) மற்றும் சரியான வடிவமைப்பு (எபே. 4:4-6) ஆகிய இரண்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது.*

*நமது ஒருமைப்பாடு, நாம் இயேசுவைப் போன்று வளருதலைச் சார்ந்துள்ளது (எபே. 4:13). நாம் எல்லாரும் எவ்வளவாக இயேசுவைப் போலாகின்றோமோ, அவ்வளவுக்கு நாம் ஆவியானவரின் ஒருமைப் பாட்டைக் கொண்டிருக்க முடியும். நாம் இயேசுவுடன் இழுத்துக் கொள்ளப்பட்டு (யோவா. 12:32) மற்றும் நாம் அவரை ஒரே மேய்ப்பன் என்ற வகையில் பின்பற்றுகின்றவர்களாகி (யோவா. 10:11, 14), நாம் ஒன்றாக முடியும். நம்மை இயேசுவிடம் இருந்து புறம்பே இழுத்துச் செல்லும் மேய்ப்பர்களை நாம் பின்பற்றும்போது, நாம் மனக்கலக்கம் அடைந்து பிரிந்துபோகின்றோம் (அப். 20:29, 30). ஆவியானவரின் கிரியை என்ற அடிப்படையின்மேல் மாத்திரமே, இயேசு விரும்புகிற ஒருமைப்பாட்டை நாம் கொண்டிருக்க முடியும் (யோவா. 17:20-23).*

## ஆவிக்குரிய யுத்தத்திற்காக நமக்கு ஆயுதங்களை அணிவிக்கின்றார்

*கிறிஸ்தவர்கள், ''பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்(ள வேண்டும்)'' என்று எபே. 6:11 கூறுகிறது. நமது ஆயுதங்களின் ஒருபகுதியாக நாம், தேவனுடைய வசனம் என்ற ஆவியின்*

பட்டயத்தைக் கொண்டுள்ளோம் (எபே. 6:17). ஆவிக்குரிய இந்த பட்டயத்தை தற்காப்புக்காகவும் விரோதியைத் தாக்குவதற்காகவும் பயன்படுத்த இயலும். வசனத்தின் தற்காப்பு பயன்பாடு பற்றித் தாவீது, "நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்" என்று எழுதினார் (சங். 119:11). வசனத்தின் தாக்கும் பயன்பாடானது சுவிசேஷத்தை பரப்புவதில் அதன் வல்லமையில் காணப்படுகிறது (அப். 8:4).

ஆவியானவரின் பட்டயத்தை, பிசாசென்ற நமது விரோதியைத் தோல்வியடையச் செய்வதற்குப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு, ஆவியானவர் நமது ஆயுதங்களை வழங்குவதன் மூலமாக பாவத்திற் கெதிரான நமது போராட்டத்தில் வெளிப்படையாக உதவுகின்றார். நமது ஆயுதத்தைப் பயன்படுத்துகையில் உள்ளான பலத்தைக் கொடுப்பதன் மூலமாக அவர் நமக்கு அந்தரங்கத்தில் உதவுகின்றார் (எபே. 3:16; 1 யோவா. 4:4).

## நமது ஆராதனையிலும் ஊழியத்திலும் நம்மை வழிநடத்துகின்றார்

நாம் "ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்ய" வேண்டியவர் களாய் இருக்கின்றோம் (பிலி.3:3). இவ்வசனப்பகுதியில் "ஆராதனை" என்பது latreuo என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது வேறிடங்களில் பதினாறு முறைகள் "ஊழியம்செய்தல்" என்றும், மூன்று முறைகள் "ஆராதித்தல்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நமது ஊழியமானது ஆவியானவரால் அமைக்கப்பட்டுள்ள வரைமுறைகளுக் குள்ளாக இருக்க வேண்டும். கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதது போல் (1 கொரி. 15:58), ஆவியானவருக்குள் நாம் செய்கின்ற ஊழியமும் தேவனுக்கு மதிப்புடையதாக உள்ளது.

நாம் தேவனைச் சேருதல் பற்றிக் குறிப்பிட, proskuneo என்ற மாறுபட்ட வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது (யோவா. 4:23, 24). நமது ஆராதனையானது, இயேசுவுடன் தொடங்கியதும் (யோவா. 1:14, 17; 14:6), ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்டதுமாய் (யோவா. 16:13) இருக்கிற சத்தியத்துடன் இணைந்ததாக மனித ஆவியிலிருந்து உதிப்பதாக இருக்க வேண்டும். நமது ஊழியமானது, ஆவியானவருக்குள் காணப்படுகிற பரிசுத்தத்தின் வட்டாரத்திற்குள் இருக்க வேண்டும்.

## நம்மைப் பரிசுத்தமாக்குகின்றார்

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் ஆவியானவரால் பரிசுத்தமாக்கப் படுகின்றோம்:

> கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும்

*இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்து கொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம் (2 தெச. 2:13).*

*பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந்தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட ... (1 பேது. 1:2).*

*பரிசுத்தமாக்கப்படுதலின் ஆசீர்வாதமானது, சத்தியத்தின் வசனத்தை அவர் கொண்டுவருதலின் மூலம் வருகிறது, இதுவே நம்மைப் பரிசுத்தமாக்குகிறது (யோவா. 17:17), அல்லது நம்மைத் தேவனுடைய விசேஷித்த நோக்கத்திற்கென்று பிரித்து வைக்கிறது என்றும் கூறப்படுகிறது.*[3]

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், இந்த உலகத்தின் பாவம்நிறைந்த இலக்குகளுக்கு நம்மை ஒப்புக்கொடுத்தவர்களாய் இருக்கக் கூடாது, ஆனால் இயேசுவின் சாயலுக்கொப்ப (2 கொரி. 3:17, 18) மறுரூபமாக வேண்டும் (ரோம. 12:1, 2). இந்தப் பரிசுத்தத்தை மேம்படுத்திக் கொள்ளுதல் என்பது (2 கொரி. 7:1) நமது பொறுப்பாக உள்ளது. நாம் ஆவியானவரால் வெளிப்படுத்தப்பட்ட வசனத்தினால் வழிநடத்தப்படும்போது, நாம் பரிசுத்தப்படுத்தப்படுகின்றோம், நாம் ஆவியின் கனிகளை மேம்படுத்திக் கொள்வதால், நம்மைச் சுற்றியுள்ள துன்மார்க்க உலகத்திலிருந்து பிரித்தெடுத்து வைக்கப்படுகின்றோம்.*

*ஒரு துணியானது பாத்திரங்களை உலரவைக்கவோ, தரையை (அழுக்குநீங்க) தேய்க்கவோ அல்லது ஜன்னல்களைக் கழுவவோ பயன் படுத்தப்பட முடியும். இருப்பினும், நாட்டுக்கொடி அச்சிடப்பட்ட ஒரு துணியானது அப்படிப்பட்ட அற்பமான காரணங்களுக்குப் பயன்படுத்தப் படுவதில்லை; அது அந்த நாட்டைக் குறிக்கிற உயர்ந்த நிலைக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஒரு கொடியானது மற்ற எல்லாத் துணிகளில் இருந்தும் தனித்து எடுத்து வைக்கப்பட்டுள்ளதுபோல், கிறிஸ்தவர்கள் மற்ற எல்லா மக்களிலிருந்தும் தனித்து எடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள், ஆவியானவரின் ஊழியத்தின் மூலமாக தேவனுடைய உயர்வான நோக்கங்களுக்குப் பணியாற்றும்படிக்குப் பரிசுத்தப்படுத்தப்பட்டு அல்லது அர்ப்பணிக்கப்பட்டு இருக்கின்றனர். இனியும் நாம் நம்மை உலகப்பிர காரமான விஷயங்களுக்குப் பயன்படுத்தக்கூடாது. நாம், ஆவியானவரால் அமைத்து வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி இயேசுவுக்கு ஊழியம் செய்ய நம்மையே அர்ப்பணிக்க வேண்டும்.*

## முடிவுரை

*கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது வாழ்வில், பரிசுத்த ஆவியானவர் மிகமுக்கியமான வகையில் செயல்படுகின்றார். நாம் ஆவியானவர் மூலமாக, வெளிப்படுத்துதல், இயக்குதல், பெலம் மற்றும் பிற பயன்கள் பலவற்றைக் கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். ஆவியானவர் வெளிப்படுத்தியுள்ள சத்தியங்களை நாம் பின்பற்றும்போது, அவர் தமது கிரியையின்மூலம் நமது*

*வாழ்வை ஆசீர்வதிக்கின்றார். கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்வைத் தொடங்கி அதைத் தொடருதலை நமக்குச் சாத்தியப்படுத்தியுள்ளதற்காக ஆவியானவருக்கு நாம் கடன்பட்டுள்ளோம். பிதா குமாரன் பரிசுத்த ஆவியுடன் பரலோகத்தில் நாம் ஜீவனைப் பெறுதல் என்பது ஆவியான வரின் மாபெரும் கிரியையின் அளவையே சார்ந்திருக்கும்.*

---

*குறிப்புகள்*

[1]Barklay M. Newman and Eugene A. Nida, *A Translator's Handbook on Paul's Letter to the Romans* (London: United Bible Society, 1973), 164. [2]Everett F. Harrison, "Romans," *The Expositor's Bible Commentary,* vol.10, *Romans-Galatians*, gen. ed. Frank E. Gaebelein (Grand Rapids, Mich.: Zondervan, 1976), 96. [3]The verb root form *hagiazo,* "sanctify" (whose cognate forms are the adjective *hagios,* "holy" or "saint," and the noun form *hagiasmos,* "sanctification"), means "to set apart" or "dedicate" for a special purpose.

---

## கிறிஸ்தவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவரின் கிரியை

1. *அவர் நம்மைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்திலிருந்து விடுதலையாக்குகின்றார் (ரோம. 8:2-8).*
2. *அவர் நமக்கு உயிர்த்தெழுதலைக் கொண்டு வருவார் (ரோம. 8:11).*
3. *அவர் நமது ஜெபங்களில் உதவுகின்றார் (ரோம. 8:26; எபே. 6:18).*
4. *அவர் நமக்காக வேண்டுதல் செய்கின்றார் (ரோம. 8:26, 27).*
5. *அவர் நம்மை வழிநடத்துகின்றார் (ரோம. 8:14).*
6. *அவர் நம்மை மீட்கப்படும் நாளுக்கென்று அச்சாரமாக முத்திரையிடுகின்றார் (2 கொரி. 1:22; எபே. 1:13, 14; 4:30).*
7. *அவர் நம்முடன் ஐக்கியம் கொள்கின்றார் (2 கொரி. 13:14).*
8. *அவர் நமக்குப் பிதாவினிடம் சேரும் வழியைக் கொடுக்கின்றார் (எபே. 2:18).*
9. *அவர் நமது உள்ளான மனுஷனைப் பெலப்படுத்துகின்றார் (எபே. 3:16).*
10. *அவர் ஒருமைப்பாட்டைக் கொண்டுவருகின்றார் (எபே. 4:3).*
11. *அவர் நம்மைப் பரிசுத்தமாக்குகின்றார் (2 தெச. 2:13).*